# புதிய உடன்படிக்கை

*மத் 26:28 இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது. (மாற் 14:24, லூக்கா 22:20, 1கொரி. 11:25 ).*

*எபி 8:8 .......... இதோ, கர்த்தர் சொல்லுகிறதென்னவெனில்: இஸ்ரவேல் குடும்பத்தோடும் யூதா குடும்பத்தோடும் நான் புது உடன்படிக்கையை ஏற்படுத்துங்காலம் வருகிறது.*

*9 அவர்களுடைய பிதாக்களை எகிப்து தேசத்திலிருந்து கொண்டுவரும்படிக்கு நான் அவர்களுடைய கையைப் பிடித்த நாளிலே அவர்களோடு பண்ணின உடன்படிக்கையைப்போல இது இருப்பதில்லை; அந்த உடன்படிக்கையிலே அவர்கள் நிலைநிற்கவில்லையே, நானும் அவர்களைப் புறக்கணித்தேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.*

*10 அந்த நாட்களுக்குப்பின் நான் இஸ்ரவேல் குடும்பத்தாரோடே பண்ணும் உடன்படிக்கையாவது: என்னுடைய பிரமாணங்களை அவர்களுடைய மனதிலே வைத்து, அவர்களுடைய இருதயங்களில் அவைகளை எழுதுவேன்; நான் அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள்.*

*11 அப்பொழுது சிறியவன் முதற்கொண்டு பெரியவன்வரைக்கும் எல்லாரும் என்னை அறிவார்கள்; ஆகையால், கர்த்தரை அறிந்துகொள் என்று ஒருவன் தன் அயலானுக்கும், ஒருவன் தன் சகோதரனுக்கும் போதிக்கவேண்டுவதில்லை.*

*12 ஏனெனில் நான் அவர்கள் அநியாயங்களைக் கிருபையாய் மன்னித்து, அவர்கள் பாவங்களையும் அக்கிரமங்களையும் இனி நினையாமலிருப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். ( **எரே. 31:31-34; எபி 10:16-17; 13:20-21 ; 2 கொரி 3:6.** )*

புதிய உடன்படிக்கையை பற்றி வேதபண்டிதர்கள் சொல்லும் சில அருமையான கருத்துக்களை இப்போது பார்ப்போம்.

"ஆவிக்குரிய வாழ்க்கையின் அடிஸ்தானம் **'புதிய உடன்படிக்கை'.** புதிய உடன்படிக்கையினால் மாத்திரமே நமது பாவம் மன்னிக்கப்பட்டு நமது மனசாட்சி சமாதானத்தோடு இருக்க முடியும். புதிய உடன்படிக்கையினால்தான் நாம் தேவனுக்கு கீழ்ப்படிந்து அவருக்கு பிரியமான காரியங்களை செய்ய முடியும். புதிய உடன்படிக்கையினால்தான் நாம் தேவனோடு நேரடியாக தொடர்பு கொண்டு அவரை ஆழமாக அறிய முடியும். புதிய உடன்படிக்கை இல்லாமல் நமக்கு பாவமன்னிப்பின் நிச்சயம் இல்லை, தேவனுடைய சித்தத்துக்கு கீழ்ப்படிந்து அதன் படி செய்வதற்கான வல்லமை இல்லை, நமது உள்ளில் தேவனைப்பற்றிய அறிவோ, தேவனோடு உறவோ இல்லை. புதிய உடன்படிக்கைக்காக கர்த்தருக்கு நன்றி செலுத்துவோம். தேவன் நம்மோடு உடன்படிக்கை செய்திருக்கிறார்; அதனால் நாம் அந்த உடன்படிக்கையில் ஓய்ந்திருக்க முடியும். தேவனுடையவர்கள் புதிய உடன்படிக்கையை அறிந்திருக்க வேண்டும்; அல்லது, தேவனுடைய நித்திய குறிக்கோளை தங்களது வாழ்க்கையில் அவர்களால் செயல்பாட்டில் காண முடியாது."
புதிய உடன்படிக்கை முழுவதும் தேவனுடைய கிருபையால் நிறைந்திருக்கிறது. இந்த கிருபையை அனுபவிக்க வேண்டுமென்றால், தேவனுடைய மனிதர் ஒவ்வொருவரும் 'புதிய உடன்படிக்கை ' என்பது என்ன என்று நன்றாக அறிந்திருக்க வேண்டும். தேவனுடைய மக்கள் பலரும் இன்று புதிய உடன்படிக்கையை பாராட்டவோ அதை புரிந்து கொள்ளவோ இல்லை என்பது வருத்தமான விஷயம் ஆகும். **( வாட்ச்மேன் நீ ).**

பல கிறிஸ்தவர்களும், தாங்கள் கிருபையால் இரட்சிக்கப்படுகிறோம் என்று நினைக்கிறார்கள்; ஆனால் அதன் பின் தங்கள் கிறிஸ்தவ வாழ்க்கையை பழைய உடன்படிக்கையின் நியாயப்பிரமாணத்தின்படிதான் வாழ வேண்டும் என்று நினைத்து விடுகிறார்கள். இது வருத்தத்துக்குரியது. அவர்கள் இரட்சிப்புக்காக புது உடன்படிக்கையை எடுத்துக்கொள்கிறார்கள்; ஆனால் பரிசுத்தமடைவதற்கு பழைய உடன்படிக்கையை எடுத்துக்கொள்கிறார்கள். இந்த நிலமையைத்தான் பவுல் அப்போஸ்தலன் "கிருபையினின்று விழுவது" *(கலா 5:4 )* என்று குறிப்பிடுகிறார். ( **வேதாகம விளக்க விரிவுரை** )

புதிய உடன்படிக்கைக்கும் பழைய உடன்படிக்கைக்கும் உள்ள வேறுபாட்டை அறிந்து கொள்ள தவறிப்போய் இருப்பது, பல கிறிஸ்தவர்களும் இயேசு கிறிஸ்துவின் வெற்றிகளை தங்கள் வாழ்க்கையில் அனுபவிக்காமல் இருப்பதற்கான ஒரு முக்கியமான காரணம் ஆகும். ( **ஆன்ரு வாமக்** ).

வேதாகமத்தில் ***லேவி 16;9; 20:10, உபாகமம் 22:22,23*** போன்ற இடங்களில் விபச்சாரத்தில் பிடிபடும் பெண் கொல்லப்பட வேண்டும் என்று எழுதப்பட்டிருக்கிறது. **ஆனால்** இயேசு இப்படிப்பட்ட ஒரு பெண்ணிடம் "*நானும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறதில்லை; நீ போ, இனிப் பாவஞ்செய்யாதே"* ( ***யோவான் 8:11***) என்று சொல்லி அவளை தண்டிக்காமல் அனுப்பி விடுகிறார்.

***2 ராஜாக்கள் 1:8-15*** ல், 'ராஜா அழைக்கிறார்' என்று கூப்பிட்டதற்காக எலியா 102 பேரை வானத்தில் இருந்து அக்கினை இறக்கி கொல்கிறார். **ஆனால்,** ***லூக்கா 9 51-56*** ல் இயேசுவை ஏற்றுக்கொள்ளாத சமாரியர்களை, எலியாவைப்போல அக்கினி இறக்கி கொல்லட்டுமா என்று கேட்ட சீஷர்களை இயேசு கடிந்து கொள்கிறார்.

***சங்கீதம் 51:11*** ல் உம்முடைய பரிசுத்த ஆவியை என்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளாமல் இரும் என்று தாவீது கெஞ்சுகிறார். **ஆனால்** ***யோவான் 14:16*** ல் *என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படி* பரிசுத்த ஆவியானவரை தேவன் தந்தருளுவார் என்று இயேசு சொல்லுகிறார்.

***உபா 27:26*** *"நியாயப்பிரமாண வார்த்தைகளையெல்லாம் கைக்கொண்டு நடவாதவன் சபிக்கப்பட்டவன்" என்று சொல்லுகிறது.* ***ஆனால்*** ***ரோமர் 3:20*** *" எந்த மனுஷனும் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்படுவதில்லை." என்று சொல்லுகிறது.*

*1 சாமு 15:3* ல் கர்த்தர் சொல்லுகிறார் " *இப்பொழுதும் நீ போய், அமலேக்கை மடங்கடித்து, அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் சங்கரித்து, அவன்மேல் இரக்கம் வைக்காமல், புருஷரையும், ஸ்திரீகளையும், பிள்ளைகளையும், குழந்தைகளையும், மாடுகளையும், ஆடுகளையும், ஒட்டகங்களையும், கழுதைகளையும் கொன்றுபோடக்கடவாய்".* **ஆனால்** *மத் 5:44* ல் இயேசு சொல்லுகிறார் " *நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைச் சபிக்கிறவர்களைச் ஆசீர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம்பண்ணுங்கள்."*

**இது போல ஒன்றுக்கொன்று முரண்பாடாக இருக்கிறது போன்ற பல காரியங்களை நாம் வேதாகமத்தில் காணலாம். இவைகள் எல்லாம் ஏன்? ஏன் இந்த வேறுபாடு ? ஏன் இந்த மாற்றம் ? என்பது போன்ற கேள்விகளுக்கு சரியான முறையில் விடை காணாமல் சரியாக வேதாகமத்தை புரிந்து கொள்ள முடியாது.**

இந்த கேள்விகளுக்கான ஒரு நல்ல பதில் வேதாகமத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது.
*எபி 1:1 பூர்வகாலங்களில் பங்குபங்காகவும் வகைவகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம் பற்றின தேவன்,*
*2 இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம்பற்றினார்; இவரைச் சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார், இவரைக்கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார்.* *பூர்வ நாட்களில் தேவன்* தன் வெளிப்பாடுகளை பங்கு பங்காகவும் வகை வகையாகவும் கொடுத்தார். வேதாகமத்தை முறையாக அறிந்து கொள்ள வேண்டுமானால் முதலில் வேதாகமத்தின் பல **யுகங்களை ( Bible Dispensations )** பற்றி ஒரு அறிவு இருக்க வேண்டும். ஒவ்வொரு யுகத்திலும் ஒவ்வொரு விதமான சட்டங்களும் விதி முறைகளும் கொடுக்கப்பட்டிருந்தன. சில அடிப்படை உண்மைகள் எல்லா யுகங்களிலும் ஒரே மாதிரியாகவே இருந்திருக்கின்றன. இந்த ஒவ்வொரு யுகத்திலும், தேவன் தாம் தன் மக்களுடன் வைத்திருந்த உறவுமுறைகள் ஒரு **"உடன்படிக்கையின்"** அடிப்படையிலேயே இருந்திருக்கின்றது. தேவன் செய்கிறவற்றில் பெரும்பாலான அனைத்தும் அவரது உடன்படிக்கையின் அடிப்படையிலேயே இருக்கும். **தேவனுடைய சித்தத்தின்படி, அவருக்கு பிரியமான விதத்தில் ஒரு வெற்றிகரமான வாழ்க்கை வாழ விரும்பும் யாவரும் வேதாகம உடன்படிக்கைகளை பற்றியும், முக்கியமாக புதிய உடன்படிக்கையைப் பற்றியும் நன்றாக அறிந்து கொள்ள வேண்டும்.**

## வார்த்தைப்படிப்பு: உடன்படிக்கை.

**Covenant: உடன்படிக்கை:** இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மனிதர்கள் அல்லது குழுக்கள் தங்களுக்குள் செய்து கொள்ளும் ஒப்பந்தம்.

**Testament: ஏற்பாடு: உயில், மரண சாசனம்.** ஒருவரது எழுதப்பட்ட கடைசி விருப்பம்.
பழைய ஏற்பாட்டில் உடன்படிக்கை என்பதற்காக **'பெரித்'** என்ற எபிரேய வார்த்தை உபயோகப்படுத்தப்பட்டுள்ளது.
புதிய ஏற்பாட்டில், **Covenant, Testament** ஆகியவற்றுக்கான கிரேக்க வார்த்தை **"டையதிகெ".** இவ்வார்த்தை, தமிழ் வேதாகமத்தில் சுமார் 32 முறை **'உடன்படிக்கை"** என்றும், ***எபி 9:16,17*** ல் **'மரண சாசனம்'** என்றும், *2* ***கொரி 3:14; கலா 4:24*** ல் 'ஏற்பாடு' என்றும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

வேதாகமம் உண்மையில் **" ஒரு உடன்படிக்கை ".** தேவனால் மனிதனோடு ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கை. இது இரண்டு பகுதிகளை கொண்டது **1. பழைய உடன்படிக்கை ( பழைய ஏற்பாடு ). 2. புதிய உடன்படிக்கை ( புதிய ஏற்பாடு ).** பழைய உடன்படிக்கைக்குள் புதிய உடன்படிக்கை மறைந்திருக்கிறது. பழைய உடன்படிக்கைக்குள், புதிய உடன்படிக்கையின் மாதிரிகளும் நிழல்களும் நிறைந்திருக்கிறது.

தேவன் நல்லவர், அவர் அன்பானவர் ***( 1 யோவான் 4:8 ),*** அவர் ஒரு போதும் மாறாதவர். மனிதர்கள் தங்களது அனுபவத்தாலும் அறியாமையினாலும் தேவனைப்பற்றி பல காரியங்களை சொல்வார்கள். அவர்கள் அன்பில்லாய்மையினால், அறியாமையினால் சொல்கிறார்கள் ***( 1 யோவான் 4:8 ).*** **அன்புள்ளவர்களுக்குத்தான் நம் தேவன் அன்பானவர் என்ற உண்மை புரியும்.** தேவனுடைய உடன்படிக்கை அவரது சுபாவத்தை சரியாக வெளிப்படுத்துகிறது.
*ஏசா 54:8 அற்பகாலம் மூண்ட கோபத்தினால் என் முகத்தை இமைப்பொழுது உனக்கு மறைத்தேன்; ஆனாலும் நித்திய கிருபையுடன் உனக்கு இரங்குவேன் என்று கர்த்தராகிய உன் மீட்பர் சொல்லுகிறார்.*
*9 இது எனக்கு நோவாவின் காலத்திலுண்டான வெள்ளம்போலிருக்கும்; நோவாவின் காலத்திலுண்டான வெள்ளம் இனி பூமியின்மேல் புரண்டு வருவதில்லை என்று நான் ஆணையிட்டதுபோல, உன்மேல் நான் கோபங்கொள்வதில்லையென்றும், உன்னை நான் கடிந்துகொள்வதில்லையென்றும் ஆணையிட்டேன்.*

*10 மலைகள் விலகினாலும், பர்வதங்கள் நிலைபெயர்ந்தாலும், என் கிருபை உன்னைவிட்டு விலகாமலும், என் சமாதானத்தின் உடன்படிக்கை நிலைபெயராமலும் இருக்கும் என்று, உன்மேல் மனதுருகுகிற கர்த்தர் சொல்லுகிறார்.*

*உன்மேல் நான் கோபங்கொள்வதில்லையென்றும், உன்னை நான் கடிந்துகொள்வதில்லையென்றும் ஆணையிட்டேன். என் கிருபை உன்னைவிட்டு விலகாமலும், என் சமாதானத்தின் உடன்படிக்கை நிலைபெயராமலும் இருக்கும்.*

## உடன்படிக்கையா ஏற்பாடா

**'டையதிகெ'** என்ற கிரேக்க வார்த்தையின் மூல வார்த்தை **'டையதிதெமி'** என்பதாகும். **'டையா'** - இரண்டு. **'தெமெமி'** - ஏற்படுத்துவது. ஆக இவ்வார்த்தையின் அர்த்தம் 'இருவருக்கு இடையில் ஏற்படுத்தப்படுவது'. கிரேக்க இலக்கியத்தில் இவ்வார்த்தையின் அர்த்தம் "ஒவ்வொன்றையும் அதற்குரிய பல இடங்களில் ஏற்படுத்துவது, பகிர்ந்து கொடுப்பது, விநியோகம் செய்வது, ஒருவருடைய சொத்தை கொடுப்பது, ஒரு உயில் மூலமாக சொத்தை கொடுப்பது, ஒரு உயில் எழுதுவது, இருவருக்கு இடையில் உடன்பாடு செய்வது".
எபிரேயருக்கு எழுதப்பட்ட நிருபத்தில், *எபி 9:16,17* ஆகிய இடங்களை தவிர்த்து, மற்ற இடங்களில் எல்லாம் 'டையதிகெ', லேவியராகம பலி முறைகளையோ அல்லது மேசியாவின் பலியையோ குறிப்பிடுவதாக உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. முக்கியமாக, பிராயச்சித்த பலியான மேசியாவின் மேல் விசுவாசம் வைப்பதன் மூலம் ஒருவருக்கு நித்திய ஜீவன் கிடைப்பதை குறிப்பிடும்படியாக உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. இங்கே, 'தேவன் ஒரு பக்கத்தில் இருந்து, மற்றொருவருக்கு ஒன்றை சில குறிப்பிட்ட நிபந்தனைகளின் அடிப்படையில் கொடுக்கும் செயலை' குறிப்பதற்காக 'உடன்படிக்கை' என்ற வார்த்தை உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் ஒன்றை கொடுப்பவர், மற்றவர்களுக்காக மரிக்கின்ற செயலை கவனத்தில் எடுக்கும்பொழுது, உடன்படிக்கை என்ற வார்த்தைக்கும் மேலாக **'மரண சாசனம்'** என்ற வார்த்தை உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. புதிய உடன்படிக்கையானது அதை எழுதிய இயேசு கிறிஸ்துவின் மரணத்தினால் உபயோகத்துக்கு வந்ததாலும், பழைய உடன்படிக்கை, புதிய உடன்படிக்கையின் நிழலாக இருப்பதனாலும், ஆங்கில வேதாகமத்தில் இரண்டு உடன்படிக்கைகளுக்கும் 'உயில்' அல்லது **'testament'** என்ற அர்த்தமும் கொடுக்கலாம். ஆனால் தமிழ் வேதாகமத்தில் **'ஏற்பாடு'** என்ற வார்த்தை இந்த ஆழ்ந்த அர்த்தங்களை பிரதிபலிப்பது போல காணப்படவில்லை.

## பழைய ஏற்பாடும் புதிய ஏற்பாடும்

வேதாகமத்தில், வேதவாக்கியங்கள் பழைய ஏற்பாடு என்றும் புதிய ஏற்பாடு என்றும் பிரிக்கப்பட்டிருக்கின்றன. **யூத சபைக்குள் உருவாக்கப்பட்ட வேதவாக்கியங்கள் அனைத்தும் பழைய ஏற்பாடு** என்றும், **கிறிஸ்தவ சபைக்குள் எழுதப்பட்ட வேத வாக்கியங்கள் அனைத்தும் 'புதிய ஏற்பாடு' என்றும் பிரிக்கப்பட்டுள்ளன.** வேதாகமம், பழைய ஏற்பாடு என்றும் புதிய ஏற்பாடு என்றும் பிரிக்கப்பட்டிருப்பது, தேவனுடைய ஏற்பாடு - உடன்படிக்கை, வேதாகமம் முழுவதற்கும் மையத்தில் இருப்பது என்பதையே காட்டுகிறது. மனிதன், இயேசுகிறிஸ்துவின் மூலமாக கிடைக்கும் மீட்பை பெற்று, தேவனோடு இணைந்து, அவருக்கு அன்பில் ஊழியம் செய்து அவரோடு நித்திய உறவுக்குள் வர வேண்டும் என்பதே தேவனுடைய உடன்படிக்கையின் நோக்கம். இந்த நோக்கத்தைதான் வேதாகமம் முழுவதும் எடுத்துரைக்கிறது.

## வேதாகமத்தின் 15 முக்கிய உடன்படிக்கைகள்

1. சூரிய குடும்ப உடன்படிக்கை ( தேவன் மனிதனோடு ஏற்படுத்தியது ) *( ஆதி 1:14-18;8:22; சங் 89:34-37; எரே 31:35-37; 33:19-26 ).*
2. ஏதேன் உடன்படிக்கை *( ஆதி 1:26 - 3:24 ).*
3. ஆதாமிய உடன்படிக்கை *( ஆதி 3:14 - 19 ).*
4. காயினோடு உடன்படிக்கை *( ஆதி 4:11-15 ).*
5. நோவாவோடு உடன்படிக்கை *( ஆதி 8: 20 - 9:29 ).*
6. ஆபிரகாமோடு உடன்படிக்கை *( ஆதி 12:1-3 ).*
7. ஆகாரோடு உடன்படிக்கை *( ஆதி 16: 7-14 ).*
8. சாராளோடு உடன்படிக்கை *( ஆதி 17:15-19; 18:9-15 ).*
9. குணமாக்கும் உடன்படிக்கை ( தேவன் இஸ்ரவேலோடு ஏற்படுத்தியது ) *( யாத் 15:26; 23:25 ).*
10. பழைய உடன்படிக்கை ( மோசே உடன்படிக்கை - பழைய ஏற்பாடு - முதல் உடன்படிக்கை ) *( யாத் 20:1-24:8; 2 கொரி 3:6-18; எபி 8:7;9:1).*
11. லேவி உடன்படிக்கை *( எண் 25:10-14 ).*
12. பாலஸ்தீனிய உடன்படிக்கை *( லேவி 26; உபா 11:8-32; 27:1 - 30:20 ).*
13. உப்பு உடன்படிக்கை *( லேவி 2:13; எண் 18:19 ).*
14. தாவீதோடு உடன்படிக்கை *( 2 சாமு 7:1-17 ).*
15. புதிய உடன்படிக்கை *( மத் 26:28; 2 கொரி 3:6-18 ).*

தேவன் மனிதனோடு ஏற்படுத்திய இந்த வேதாகம உடன்படிக்கைகள் அனைத்திலும் " **ஆபிரகாமோடு உடன்படிக்கை, பழைய உடன்படிக்கை, புதிய உடன்படிக்கை** " ஆகிய மூன்றும் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக

கருதப்படுகிறது. உண்மையில் புதிய உடன்படிக்கையை, **ஆபிரகாமோடு செய்யப்பட்ட உடன்படிக்கையின் தொடர்ச்சி** என்றும் எடுத்துக்கொள்ளலாம். பழைய உடன்படிக்கை ( நியாயப்பிரமாணம் ) இதற்கு இடையில் 'கூட்டப்பட்டது'. அதாவது கூடுதலாக கொடுக்கப்பட்டது ***( கலா 3:19 ).***

( ஏன் தேவன் நியாயப்பிரமாணத்தை கொடுத்தார், நியாயப்பிரமாணத்தின் நோக்கம், நியாயப்பிரமாணத்தின் கீழ் வாழுவதனால் உள்ள பிரச்சினைகள், நியாயப்பிரமாண யுகம் - ஆகியவற்றைப்பற்றி மேலும் நீங்கள் அறிந்து கொள்ள விரும்பினால் **"நாம் நியாயப்பிரமாணத்துக்கு கீழ்ப்பட்டவர்கள் அல்ல; கிருபைக்கு கீழ்ப்பட்டவர்கள்"** என்ற எமது வேதாகம பாடத்தை படிக்கவும் ).

## நாம் பழைய உடன்படிக்கைக்கு கீழ்ப்பட்டவர்கள் அல்ல; புதிய உடன்படிக்கைக்கு கீழ்ப்பட்டவர்கள்

*2கொரி 3:6 புது உடன்படிக்கையின் ஊழியக்காரராயிருக்கும்படி, அவரே எங்களைத் தகுதியுள்ளவர்களாக்கினார். அந்த உடன்படிக்கை எழுத்திற்குரியதாயிராமல், ஆவிக்குரியதாயிருக்கிறது; எழுத்து கொல்லுகிறது, ஆவியோ உயிர்ப்பிக்கிறது.*

***2 கொரி 3:6-18*** வரை உள்ள வசனங்களில், பவுல் பழைய உடன்படிக்கையின் ஊழியத்துக்கும் புதிய உடன்படிக்கையின் ஊழியத்துக்கும் உள்ள வேறுபாடுகளை விளக்குகிறார். இதில் பழைய உடன்படிக்கையை கீழ்க்காணும் விதமாக விவரிக்கிறார். " **எழுத்து,** கொல்லுகிறது ***( வச 6 ),*** மகிமையுடையது ***( வச 8 ),*** ஆக்கினைத்தீர்ப்பு கொடுப்பது ***( வச 9 ),*** ஒழிந்து போவது ***( வச 11 ),*** முக்காடு போடப்பட்டது. அதாவது தேவனை சரியாக பார்ப்பதை தடை செய்கிறது ***( வச 13 ),*** நீக்கப்பட்டது ***( வச 14 )".***

புதிய உடன்படிக்கையை கீழ்க்காணும் விதமாக விவரிக்கிறார். " **ஆவி,** உயிர்ப்பிப்பது ***( வச 6 ),*** அதிக மகிமையுள்ளது ***( வச 9,11 ),*** நீதியை கொடுப்பது ***( வச 9 ),*** நிலைத்திருப்பது - இன்றும் நிலைத்திருப்பது ***( வச 11 ),*** மறுரூபப்படுத்துகிறது; நம்மை, தேவனுடைய உண்மையான மகிமையை காண வைக்கிறது. ***( வச 16-18 ).***

இவ்வசனங்களில் இருந்து நாம் மனதிலாக்கிக்கொள்ளலாம், பழைய உடன்படிக்கை என்னும் நியாயப்பிரமாணம் நம்மை ஆக்கினைத்தீர்ப்புக்குள்ளாக்குகிறது. விசுவாசிகளுக்கு அது இப்போது நீக்கப்பட்டு அவர்கள் கிருபையால் நிறைந்திருக்கும் புது உடன்படிக்கைக்குள் இருக்கிறார்கள்.

*ரோம 7:6 இப்பொழுதோ நாம் பழமையான எழுத்தின்படியல்ல, புதுமையான ஆவியின்படி ஊழியஞ்செய்யத்தக்கதாக, நம்மைக் கட்டியிருந்த நியாயப்பிரமாணத்துக்கு நாம் மரித்தவர்களாகி, அதனின்று விடுதலையாக்கப்பட்டிருக்கிறோம்.*

*எபி 10:19 ஆகையால், சகோதரரே, நாம் பரிசுத்தஸ்தலத்தில் பிரவேசிப்பதற்கு இயேசுவானவர் தமது மாம்சமாகிய திரையின் வழியாய் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை நமக்கு உண்டுபண்ணினபடியால்,*

தேவனிடம் கிருபை பெற செல்வதற்கான புதிய மார்க்கம் இது. பழைய உடன்படிக்கையின் படி பிரதான ஆசாரியனைத்தவிர யாரும் மகாப்பரிசுத்த ஸ்தலத்துக்குள் செல்ல முடியாது. **இப்போது செல்ல வேண்டுமானால் புதிய உடன்படிக்கையின் படி மாத்திரமே செல்ல முடியும்.**

## பழைய உடன்படிக்கையையும், புதிய உடன்படிக்கையையும் கலப்பதனால் உள்ள ஆபத்துகள்.

***கலாத்தியர்; 2;16, 3;10-12, 18 4;9 5;4 அப்; 15;10-11*** போன்ற வசனங்கள் பழைய உடன்படிக்கையில் உள்ள கட்டளைகளை கைக்கொண்டு நடப்பதன் மூலம் யாரும் நீதிமான்களாக்கப்பட முடியாது என்பதை தெளிவாக்குகின்றன. இயேசு கிறிஸ்து பல பழைய சம்பிரதாயங்களை ஏன் கைக்கொள்ளவில்லை என்று அவரிடம் கேள்வி எழுப்பப்பட்ட போது, அதற்கு அவர் ஒரு உவமைமூலம் பதில் சொல்கிறார்.

*லூக் 5:36 அவர்களுக்கு ஒரு உவமையையும் சொன்னார்: ஒருவனும் புதிய வஸ்திரத்துண்டைப் பழைய வஸ்திரத்தின்மேல் போட்டு இணைக்கமாட்டான், இணைத்தால் புதியது பழையதைக் கிழிக்கும்; புதியவஸ்திரத்துண்டு பழைய வஸ்திரத்துக்கு ஒவ்வாது.*

*37 ஒருவனும் புது திராட்சரசத்தைப் பழந்துருத்திகளில் வார்த்துவைக்கமாட்டான்; வார்த்துவைத்தால் புதுரசம் துருத்திகளைக் கிழித்துப்போடும், இரசமும் சிந்திப்போம், துருத்திகளும் கெட்டுப்போம்.*

*38 புது ரசத்தைப் புது துருத்திகளில் வார்த்துவைக்கவேண்டும், அப்பொழுது இரண்டும் பத்திரப்பட்டிருக்கும்.*

*39 அன்றியும் ஒருவனும் பழைய ரசத்தைக் குடித்தவுடனே புது ரசத்தை விரும்பமாட்டான், பழைய ரசமே நல்லதென்று சொல்லுவான் என்றார்.*

இந்த உவமையில் இருந்து பழைய உடன்படிக்கையையும் புதிய உடன்படிக்கையையும் சேர்க்க முடியாது; புதிய உடன்படிக்கையில் இருந்து எதையாகிலும் எடுத்து பழைய உடன்படிக்கையுடனோ, பழைய உடன்படிக்கையில் இருந்து எதையாகிலும் எடுத்து புதிய உடன்படிக்கையுடனோ ஒட்டுப்போட முடியாது; அது ஒவ்வாது; பழைய உடன்படிக்கையில் பழகிப்போனவர்கள் புதிய உடன்படிக்கையை விரும்ப மாட்டார்கள் என்று இயேசு சொல்லுகிறார்.

## புது உடன்படிக்கை எவ்வாறு நமக்கு உரியதாக ஆகிறது

**தேவன் புதிய உடன்படிக்கையை இஸ்ரவேல் குடும்பத்தோடும் யூதா குடும்பத்தோடுமே ஏற்படுத்தினார்.**

*எரே 31:31 இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார், அப்பொழுது இஸ்ரவேல் குடும்பத்தோடும் யூதா குடும்பத்தோடும் புது உடன்படிக்கை பண்ணுவேன்.*
*32 நான் அவர்கள் பிதாக்களை எகிப்துதேசத்திலிருந்து அழைத்து வரக் கைப்பிடித்த நாளிலே, அவர்களோடே பண்ணின உடன்படிக்கையின்படி அல்ல; ஏனெனில் நான் அவர்களுக்கு நாயகராயிருந்தும், அந்த என் உடன்படிக்கையை அவர்கள் மீறி அவமாக்கிப்போட்டார்களே என்று கர்த்தர் சொல்லுகிறார்.* ***( எபி 8:8-10 )***

தேவன் ஒரு போதும் யூதர்கள் அல்லாத மற்ற புற ஜாதிகளோடு ஒரு உடன்படிக்கையும் பண்ணியதில்லை. அவர் அவர்களோடு பழைய உடன்படிக்கை ஒன்றும் பண்ணவில்லை; ஆகவே இனி புதிய உடன்படிக்கை ஒன்றையும் பண்ண போவதில்லை.

## புதிய உடன்படிக்கையின் காலம்.

" *இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார்,"* ***எரே 31:31;*** *" அந்த நாட்களுக்குப்பின் ".* புதிய உடன்படிக்கையைப்பற்றி குறிப்பிடும் அனைத்து வசனங்களையும் எடுத்துப்பார்க்கும்போது, தேவன், யூதா குடும்பத்தோடும் இஸ்ரவேல் குடும்பத்தோடும் புதிய உடன்படிக்கையை ஏற்படுத்தும் காலம் தெளிவாக புலப்படும். " இக்காலம் - **ஆயிரம் வருட அரசாட்சியின் தொடக்க காலம்** ". அதாவது இயேசுவின் இரண்டாம் வருகைக்கு பிறகு.

**அப்படியானால், இப்போது எவ்வாறு சபை புதிய உடன்படிக்கைக்குள் வரும் ? தேவன், இஸ்ரவேல் குடும்பத்தோடும் யூதா குடும்பத்தோடும் உடன்படிக்கை செய்வேன் என்று சொல்லிவிட்டு பின் அதை எவ்வாறு நமக்கு உரியதாக ஆக்க முடியும் ?**

இயேசு கிறிஸ்து, தன் சிலுவை மரணத்துக்கு முன்பதாக, தன் சீஷர்களோடு பஸ்காவை ஆசரிக்கிறார். அவர் அப்போது சொல்லுகிறார் " *மாற் 14:24 அப்பொழுது அவர் அவர்களை நோக்கி: இது அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது."* பவுல் அப்போஸ்தலன் இவ்வார்த்தைகளை எடுத்து அவற்றை திருச்சபைக்குரியதாக உபயோகிக்கிறார் ***( 1 கொரி 11:23 - 27 ). எபி 9:15; 12:24*** ஆகிய வசனங்கள் இயேசுகிறிஸ்து "இயேசு கிறிஸ்து **இப்போது** புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தராக இருக்கிறார் " என்ற அர்த்தத்தையே குறிப்பிடுகின்றன.

ஆகவே, இந்த கேள்விக்கான பதில் விளக்கத்தை **"முன்பு யூதரிலும்"** - ***ரோமர் 1:16*** ( **Jew first** - **முதலாவது யூதருக்கு** ) என்ற தேவனுடைய கோட்பாட்டில் இருந்து அறிந்து கொள்ளலாம். தேவன் தன் மக்களுக்கு ஒரு புது உடன்படிக்கையை வாக்குத்தத்தம் பண்ணியிருந்தார். ஆனால், இந்த ஆசீர்வாதங்கள் அனைத்தும் அவருடைய புத்திரனான இயேசு கிறிஸ்துவுக்குள் அடங்கியிருக்கிறது ***( 2 கொரி 1:20 ).*** அவரே புது உடன்படிக்கையின் மத்தியஸ்தர். இயேசு பூலோக ஊழியத்தை ஆரம்பித்த போது, முதலாவது அவர் தன் சொந்த ஜனங்களிடமே சென்றார் ***( மத் 15:24 ).*** அவர் தன் சீஷர்களை ஊழியத்துக்கு அனுப்பிய போது அவர்களை முதலாவது இஸ்ரவேல் ஜனங்களிடத்திற்கே அனுப்பினார் ***( மத் 10:5-6 ).*** தன் திருச்சபையை சாட்சி சொல்ல அனுப்பிய போதும் அவர்களை முதலாவது எருசலேமில் தொடங்க சொன்னார் ***( லூக்கா 24: 47; அப் 1:8 ).*** பேதுரு பெந்தேகோஸ்தே நாளில் செய்த பிரசங்கம் யூதர்களுக்கும், யூதர்களாக மத மாறிய புற ஜாதிகளுக்குமே கொடுக்கப்பட்டது ***( அப் 2:14, 22,36 ).*** நற்செய்தி முதலில் யூதர்களுக்கே கொடுக்கப்படும் என்று ***அப் 3:25-26*** ல் மீண்டும் தெளிவு படுத்தினார்.

ஆயினும் யூத ஜனங்களில் பெரும்பாலானோர் நற்செய்தியை ஏற்றுக்கொள்ளாமல் உதறித்தள்ளினார்கள். திருச்சபையின் ஊழியத்தை யூத மத தலைவர்கள் கடுமையாக எதிர்த்தார்கள். இதன் ஒரு விளைவுதான் ஸ்தேவானை கல்லெறிந்து கொன்றார்கள் ( *அப் 7 ம் அதிகாரம்* ). ஆனால் இதற்கு தேவனுடைய பதில் எவ்வாறாக இருந்தது ? **நற்செய்தி, எருசலேமை விட்டு வெளியே சென்று யூதேயாவையும் சமாரியாவையும் அடைந்தது** ***( அப் 8 ம் அதிகாரம் ).*** அதன் பின் நற்செய்தி புற ஜாதியாரையும் சென்று அடைந்தது ***( அப் 10 ம் அதிகாரம் ).***
இன்றைய திருச்சபையானது மறுபடியும் பிறந்த யூதர்களையும் புற ஜாதியாரையும் கொண்டது. அவர்கள் இயேசுவுக்குள் ஒரே சரீரமாக இருக்கிறார்கள் ***( எபே 2:11-22; கலா 3:27 -29 ).*** **'இயேசுவுக்குள்' இருக்கும் யாவரும், சிலுவையினால் வாங்கப்பட்ட புதிய உடன்படிக்கையின் பங்காளர்கள். இன்று புதிய உடன்படிக்கையின் ஆசீர்வாதங்கள் ஒவ்வொருவருக்கும் சொந்தமானவை.** வருங்காலத்தில் ஒரு நாள், இயேசுவின் இரண்டாம் வருகையில், இந்த புதிய உடன்படிக்கையின் ஆசீர்வாதங்கள் இஸ்ரவேல் தேசத்துக்கு கொடுக்கப்படும்.

தேவன், மனிதனோடு ஏற்படுத்திய உடன்படிக்கையின் பூரணத்துவம் இயேசு கிறிஸ்து ,
*"2கொரி 1:20 எங்களால் தேவனுக்கு மகிமையுண்டாகும்படி, தேவனுடைய வாக்குத்தத்தங்களெல்லாம் இயேசுகிறிஸ்துவுக்குள் ஆம் என்றும், அவருக்குள் ஆமென் என்றும் இருக்கிறதே.*

*அப் 3:25 நீங்கள் அந்தத் தீர்க்கதரிசிகளுக்குப் புத்திரராயிருக்கிறீர்கள்; உன் சந்ததியினாலே பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும் என்று தேவன் ஆபிரகாமுக்குச் சொல்லி, நம்முடைய முன்னோர்களோடே பண்ணின உடன்படிக்கைக்கும் புத்திரராயிருக்கிறீர்கள்.*
*கலா 3:29 நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குத்தத்தத்தின்படியே சுதந்தரராயும் இருக்கிறீர்கள்.*
*கலா 3:16 ஆபிரகாமுக்கும் அவனுடைய சந்ததிக்கும் வாக்குத்தத்தங்கள் பண்ணப்பட்டன; சந்ததிகளுக்கு என்று அநேகரைக் குறித்துச் சொல்லாமல், உன் சந்ததிக்கு என்று ஒருவனைக்குறித்துச் சொல்லியிருக்கிறார், அந்தச் சந்ததி கிறிஸ்துவே.*
ஆபிரகாமின் **'சந்ததியாய்'** தேவனுடைய வாக்குத்தத்தங்கள் எல்லாம் இயேசுவுடையவை. இயேசுகிறிஸ்துவுக்குள் அந்த வாக்குத்தத்தங்கள் எல்லாம் நமக்குரியது. **ஆகவே, புதிய உடன்படிக்கையை தேவன், இயேசுவுக்குள் நம்மோடு ஏற்படுத்தியிருக்கிறார்.** இயேசுவுக்குள் புதிய உடன்படிக்கையின் ஆசீர்வாதங்கள் எல்லாம் நமக்கு சொந்தம். இப்படியாகத்தான் நாம் புதிய உடன்படிக்கைக்குள் வருகிறோம்.

## பழைய ஏற்பாட்டின் உபயோகங்கள்

**நாம் பழைய உடன்படிக்கைக்கு உட்பட்டவர்கள் அல்ல என்பதனால் பழைய ஏற்பாடு நமக்கு அவசியம் இல்லை என்று எடுத்துக்கொள்ளக்கூடாது.**
*2தீமோ 3:16 வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, 17 அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது.*
பழைய ஏற்பாடு முழுவதும் நியாயப்பிரமாணம் அல்ல ***( எபி 9:1 ).*** அதற்குரிய உபயோகங்கள் அதற்கு உண்டு. முக்கியமாக பழைய ஏற்பாடு தேவனுடைய நீதி நெறிமுறைகளையும், நாம் எதில் இருந்து மீட்கப்பட்டோம் என்பதையும் காண்பிக்கிறது. பழைய உடன்படிக்கையில் பிரமாணங்களை மீறுபவர்களுக்கு கொடுக்கப்பட்ட கடுமையான தண்டனைகளில் இருந்து, புதிய உடன்படிக்கையில் தேவன் நம்மேல் காண்பிக்கும் இரக்கத்தின் மேன்மையை மனதிலாக்கிக்கொள்ளலாம்.

*எபி 1:1 பூர்வகாலங்களில் பங்குபங்காகவும் வகைவகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம் பற்றின தேவன்,*
முதல் உடன்படிக்கையின் சத்தியங்களின் வெளிப்பாடு **"பங்கு பங்காகவும்" "வகை வகையாகவும்"** தீர்க்க தரிசிகள் மூலமாக கொடுக்கப்பட்டது. அது படிப்படியாக கொடுக்கப்பட்டது. எல்லா சத்தியங்களின் வெளிப்பாடும் ஒரே முறையாக கொடுக்கப்படக்கூடாமல் இருந்தது. ஏனென்றால் அவர்களது ஆவிக்குரிய நிலமையின் படி அவர்களால் அவற்றை புரிந்து கொள்ள முடியாமல் இருந்தது. ஆகவே வெளிப்பாடுகள் **பங்கு பங்காக பல பாகங்களாக கொடுக்கப்பட்டது**. மேலும் **வகை வகையாகவும்** கொடுக்கப்பட்டது. நியாயப்பிரமாணமாக, தீர்க்கதரிசனமாக, சரித்திரமாக, சங்கீதமாக, அடையாளமாக, எடுத்துக்காட்டாக, உவமையாக.
*ரோம 15:4 தேவவசனத்தினால் உண்டாகும் பொறுமையினாலும் ஆறுதலினாலும் நாம் நம்பிக்கையுள்ளவர்களாகும்படிக்கு, முன்பு எழுதியிருக்கிறவைகளெல்லாம் நமக்குப் போதனையாக எழுதியிருக்கிறது.*
*1கொரி 10:6 அவர்கள் இச்சித்ததுபோல நாமும் பொல்லாங்கானவைகளை இச்சியாதபடிக்கு, இவைகள் நமக்குத் திருஷ்டாந்தங்களாயிருக்கிறது.*
*1கொரி 10:11 இவைகளெல்லாம் திருஷ்டாந்தங்களாக அவர்களுக்குச் சம்பவித்தது; உலகத்தின் முடிவுகாலத்திலுள்ள நமக்கு எச்சரிப்புண்டாக்கும்படி எழுதப்பட்டும் இருக்கிறது.*
*கொலோ 2:16 ஆகையால், போஜனத்தையும் பானத்தையும் குறித்தாவது, பண்டிகை நாளையும் மாதப்பிறப்பையும் ஓய்வுநாட்களையுங்குறித்தாவது, ஒருவனும் உங்களைக் குற்றப்படுத்தாதிருப்பானாக. 17 அவைகள் வருங்காரியங்களுக்கு நிழலாயிருக்கிறது; அவைகளின் பொருள் கிறிஸ்துவைப்பற்றினது.*
*எபி 10:1 இப்படியிருக்க, நியாயப்பிரமாணமானது வரப்போகிற நன்மைகளின் பொருளாயிராமல், அவைகளின் நிழலாய் மாத்திரம் இருக்கிறபடியால், வருஷந்தோறும் இடைவிடாமல் செலுத்தப்பட்டுவருகிற ஒரேவிதமான பலிகளினாலே அவைகளைச் செலுத்த வருகிறவர்களை ஒருக்காலும் பூரணப்படுத்தமாட்டாது.*
பழைய ஏற்பாடு புதிய ஏற்பாட்டின் நிழலாக இருக்கிறது. புதிய ஏற்பாடு நிஜமாக இருக்கிறது. பழைய ஏற்பாடு இல்லாமல் நாம் புதிய ஏற்பாட்டை தெளிவாக மனதிலாக்கிக்கொள்ள முடியாது.

## பழைய, புதிய உடன்படிக்கைகளின் காலங்கள்.

**பழைய உடன்படிக்கை:** ***யாத் 12:38 - மத் 2:23.*** இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்தில் இருந்து புறப்பட்ட சமயத்தில் இருந்து யோவான் ஸ்நாபகன் பரலோக ராஜ்யத்தை குறித்து பிரசங்கித்த சமயம் வரை. மோசேயின் காலத்தில் இருந்து இயேசு கிறிஸ்துவின் காலம் வரை. சுமார் 1,718 வருடங்கள். ***( மத் 11:12-13; லூக்கா 16:16 )***
**புதிய உடன்படிக்கை:** சிலுவையில் தொடங்கி நித்திய காலமாக இருக்கிறது ***( எபி 13:20 ).***
*எபி 8:13 புது உடன்படிக்கை என்று அவர் சொல்லுகிறதினாலே முந்தினதைப் பழமையாக்கினார்; பழமையானதும் நாள்பட்டதுமாயிருக்கிறது உருவழிந்துபோகக் காலம் சமீபித்திருக்கிறது.*

### தேவன் ஏன் ஒரு உடன்படிக்கை செய்ய வேண்டும், அவரது கிருபை மாத்திரம் போதாதா

*சங் 89:34 என் உடன்படிக்கையை மீறாமலும், என் உதடுகள் விளம்பினதைமாற்றாமலும் இருப்பேன்.*
கிருபை என்பது சட்டப்பூர்வமானது அல்ல. அது சட்டத்துக்கு உட்பட்டது அல்ல. கிருபையை விசுவாசத்தால் மாத்திரமே அடைய முடியும். நம் விசுவாசம் சில சமயங்களில் மாறலாம். அதனால்தான், நம் நல்ல தேவன், அவர் கிருபையானவர் மாத்திரம் அல்ல, **தன்னை ஒரு உடன்படிக்கைக்குள் கட்டுப்படுத்தியிருக்கிறார்.** அவரது உடன்படிக்கையை அவர் சட்டப்பூர்வமாக நிறைவேற்றியே ஆக வேண்டும். **இது கிருபையின் வெளிப்பாட்டின் உச்சகட்டம்.**
ஒருவர் நமக்கு அன்பினால் நமக்கு தகுதி இல்லாத ஏதாவது ஒன்றை தருவேன் என்று சொல்லியிருந்தால் அது கிருபை. ஆனால் ஒருவேளை அவர் அதை நமக்கு தராவிட்டால், நம்மால் ஒன்றும் செய்ய முடியாது. ஆனால் உடன்படிக்கை அப்படி அல்ல. ஒருவர் நமக்கு ஒரு காரியத்தை தருவதாக அல்லது செய்வதாக உடன்படிக்கை செய்திருந்தால் அது சட்டபிரகாரமானது. **அதை அவர் கொடுத்தே ஆக வேண்டும். அப்படி கொடுக்காத பட்சத்தில் அவர் மீது வழக்கு தொடரப்படலாம்.**
தேவனுடைய உடன்படிக்கை என்பது மிகவும் சக்திவாய்ந்தது. தேவன் தருவதாக அல்லது செய்வதாக சொன்னதை ஒரு போதும் மீற மாட்டார். **தேவனுடைய உடன்படிக்கையையும் அதன் வலிமையையும் அறிந்தவர்களால் மாத்திரமே அதன் பலன்களை அனுபவித்து ஒரு வெற்றி உள்ள விசுவாச வாழ்க்கை வாழ முடியும்.**

## புதிய உடன்படிக்கையின் சிறப்பு அம்சங்கள்

### 1. இயேசுவின் இரத்தம் புதிய உடன்படிக்கையை அமுலுக்கு கொண்டு வந்தது

*மத் 26:28 இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது.*
பழைய உடன்படிக்கை அமுலுக்கு கொண்டு வரப்பட்ட போது, அது இரத்தம் சிந்துதலினாலேயே கொண்டு வரப்பட்டது.
*யாத் 24:6 அப்பொழுது மோசே அந்த இரத்தத்தில் பாதி எடுத்து, பாத்திரங்களில் வார்த்து, பாதி இரத்தத்தைப் பலிபீடத்தின்மேல் தெளித்து,*
*7 உடன்படிக்கையின் புஸ்தகத்தை எடுத்து, ஜனங்களின் காது கேட்க வாசித்தான்; அவர்கள் கர்த்தர் சொன்னபடியெல்லாம் செய்து, கீழ்ப்படிந்து நடப்போம் என்றார்கள்.*
*8 அப்பொழுது மோசே இரத்தத்தை எடுத்து, ஜனங்களின்மேல் தெளித்து, இந்த வார்த்தைகள் யாவையுங்குறித்து கர்த்தர் உங்களோடே பண்ணின உடன்படிக்கையின் இரத்தம் இதுவே என்றான்.*
இந்த இரத்தமானது பலி செலுத்தப்படும் இரத்தம். விலங்குகளின் இரத்தம் சர்வாங்க தகன பலியாகவும் சமாதானபலியாகவும் செலுத்தப்பட்டது ***( வச 5 ).*** பலிபீடத்தின் மேல் தெளிக்கப்பட்ட ஒரு பாதி இரத்தம், தேவனுக்கு பலி செலுத்தப்பட்டதை குறிப்பிடுகிறது. மறு பாதி ஜனங்கள் மேல் தெளிக்கப்பட்டது, தேவனுக்கு செலுத்தப்பட்ட அந்த பலியில் ஜனங்களுக்கும் பங்கு உண்டு என்பதை காண்பிக்கிறது. இப்படியாக உடன்படிக்கையின் உறவு முழுமையாக ஏற்படுத்தப்பட்டது. இயேசு தன் இரத்தத்தையே பலியாக செலுத்தினார். இதன் மூலம், தன் மரணம் ஒரு பலி என்றும் அதன் மூலமாக ஜனங்கள், தேவனோடு ஒரு புது உடன்படிக்கையின் உறவுக்குள் வர முடியும் என்று காண்பித்தார். இயேசுவின் பலி, தேவனால் முழுமையாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று, அதனால் அதன் உன்னத பலன் எல்லா விசுவாசிகளுக்கும் கிடைக்கிறது. ஆகவே புதிய உடன்படிக்கையின் சகல ஆசீர்வாதங்களும் இயேசுவுக்குள் உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது. இயேசுவின் இரத்தம் " **உங்களுக்காக** சிந்தப்படுகிற " இரத்தம். *லூக் 22:20 ......... இந்தப் பாத்திரம் உங்களுக்காகச் சிந்தப்படுகிற என்னுடைய இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது என்றார்.*
**இயேசுவின் இரத்தம்தான் நம்மை பரிபூரணமாக்கியிருக்கிறது. எபி 10 ம் அதிகாரம். இயேசுவின் இரத்தத்தால்,** நாம் என்றென்றைக்கும் பரிசுத்தமாக்கப்படிருக்கிறோம் ***( எபி 10:10,14 ).*** நமக்கு பாவ மன்னிப்பு இருக்கிறது ***( எபி 10:18 ),*** நாம் பரிபூரணமாக்கப்பட்டிருக்கிறோம் ***( எபி 10:14 ),*** நமக்கு பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிக்க தைரியம் அடைந்திருக்கிறோம், தேவனுடைய சந்நிதியில் எப்போதும் செல்ல உரிமை பெற்றிருக்கிறோம் ***( எபி 10:20,21 ).***

### 2. புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தர் 'இயேசு கிறிஸ்து'.

*எபி 9:15 ஆகையால் முதலாம் உடன்படிக்கையின் காலத்திலே நடந்த அக்கிரமங்களை நிவிர்த்திசெய்யும்பொருட்டு அவர் மரணமடைந்து, அழைக்கப்பட்டவர்கள் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட நித்திய சுதந்தரத்தை அடைந்துகொள்வதற்காக, புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராயிருக்கிறார்.*

**இயேசு எவ்வாறு புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தர் ஆனார் ?**
*எபி 9:14* நித்திய ஆவியினாலே தம்மைத்தாமே பழுதற்ற பலியாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்த கிறிஸ்துவினுடைய இரத்தம் ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கு உங்கள் மனச்சாட்சியைச் செத்த கிரியைகளறச் சுத்திகரிப்பது எவ்வளவு நிச்சயம்!
*எபி 9:15 ஆகையால் ...........புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராயிருக்கிறார்.*

இயேசுவின் இரத்தம் 'பாவத்தில்' இருந்து நம்மை சுத்திகரிக்கிறது. ஆனால் முதல் உடன்படிக்கையில் செலுத்தப்பட்ட பிராணிகளின் இரத்தம் 'சம்பிரதாயமான அழுக்குகளையே' சுத்திகரிக்க முடிந்தது. இதனால் இயேசு கிறிஸ்து புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தர் ஆக இருக்க முடிகிறது. மத்தியஸ்தர் என்ற வார்த்தைக்கான கிரேக்க வார்த்தை **"மெஸைட்ஸ்"** என்பதாகும். இவ்வார்த்தையின் அர்த்தம் " இரண்டு பேருக்கு மத்தியில் - சமாதானத்தை உருவாக்க அல்லது நட்பை மீண்டும் நிலைநிறுத்த அல்லது ஒரு ஒப்பந்தத்தை உருவாக்க அல்லது ஒரு உடன்படிக்கையை அமுலுக்கு கொண்டுவர இருக்கிறவர்". இங்கே மேசியாவாகிய இயேசு கிறிஸ்து பரிசுத்தமான தேவனுக்கும் பாவியான மனிதனுக்கும் இடையில் ஒரு மத்தியஸ்தராக இருக்கிறார். மனிதனுக்கும் தேவனுக்கும் இடையில் ஒரு பெரிய தடையாக பாவம் இருந்தது. இயேசு கிறிஸ்து தன் மரணத்தால் இந்த பாவம் என்னும் தடையை போக்கினார். ஒரு பாவி இயேசுவின் மேல் விசுவாசம் வைக்கும்போது, அவரது பாவங்களுக்கான குற்ற மனசாட்சியும், பாவத்துக்கான தண்டனையும் இல்லாமல் போகிறது, அவரது வாழ்க்கையில் பாவத்தின் அதிகாரம் இனி இல்லை, அவர் தேவனுடைய சுபாவத்தை பெற்றுக்கொள்கிறார், அவருக்கு தேவனுக்கும் இடையில் சட்டப்பூர்வமாகவும் தனிப்பட்ட முறையிலும் இருந்த பிரிவு நீக்கப்படுகிறது.

இயேசு மத்தியஸ்தரானது, அவரது சிலுவை மரணத்துக்கு பிந்தி இருக்கிற பாவிகளின் தண்டனைக்கான பரிகாரம் செலுத்த மாத்திரம் அல்ல, சிலுவை மரணத்துக்கு முந்தி வாழ்ந்திருந்தவர்களின் தண்டனைக்கான பரிகாரம் செலுத்தவும். சிலுவை மரணத்துக்கு முன்பு ஜீவித்த மக்களும், இயேசுவின் பிராயச்சித்த பலியினாலேயே இரட்சிக்கப்படுகிறார்கள்.

## 3. புதிய உடன்படிக்கையை எழுதி அதை அமுலுக்கு கொண்டுவந்தது 'இயேசு கிறிஸ்து'.

*எபி 9:16 ஏனென்றால், எங்கே மரணசாசனமுண்டோ, அங்கே அந்தச் சாதனத்தை எழுதினவனுடைய மரணமும் உண்டாகவேண்டும்.*
*17 எப்படியெனில், மரணமுண்டான பின்பே மரணசாசனம் உறுதிப்படும்; அதை எழுதினவன் உயிரோடிருக்கையில் அதற்குப் பெலனில்லையே.*

புதிய உடன்படிக்கையை எழுதியவர் இயேசு கிறிஸ்து. இங்கே உடன்படிக்கை, இயேசுவின் பிராயச்சித்த மரணத்தை அடிப்படையாக கொண்டு இருப்பதால், உடன்படிக்கையானது **' மரண சாசனம் ' ( உயில் )** என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஒரு உயில் அதை எழுதியர் மரித்த பிறகே அமுலுக்கு வரும். அது போலவே புதிய உடன்படிக்கை, அதை எழுதிய இயேசுவின் மரணத்தினால் அமுலுக்கு வந்தது. ஆனால் மற்ற உயில்களைப்போல அல்லாமல், இயேசு கிறிஸ்து மரணத்தில் இருந்து உயிர்த்தெழுந்து தன் மரண சாசனத்தை முழுமையாக திறம்பட செயல்படுத்திக்கொண்டு இருக்கிறார். அவரது மரண சாசனத்தில் எழுதப்பட்டிருக்கும் அனைத்து காரியங்களும் நிறைவேற்றப்படுவதற்கான எல்லாவற்றையும் செய்து கொண்டிருக்கிறார். *( மத் 26:28, மாற்கு 14:24 ).*

## 4. தேவன் நம்மை புது உடன்படிக்கையின் ஊழியக்காரர்களாக தகுதி கொடுத்திருக்கிறார்

*2கொரி 3:6 புது உடன்படிக்கையின் ஊழியக்காரராயிருக்கும்படி, அவரே எங்களைத் தகுதியுள்ளவர்களாக்கினார்..........*
*ரோம 7:6 இப்பொழுதோ நாம் பழமையான எழுத்தின்படியல்ல, புதுமையான ஆவியின்படி ஊழியஞ்செய்யத்தக்கதாக, நம்மைக் கட்டியிருந்த நியாயப்பிரமாணத்துக்கு நாம் மரித்தவர்களாகி, அதனின்று விடுதலையாக்கப்பட்டிருக்கிறோம்.*

நாம் புது உடன்படிக்கையின் ஊழியக்காரர்களாக இருக்க வேண்டும் என்பதே தேவனுடைய சித்தம். அதற்கான சகல தகுதிகளையும் தேவன் நமக்கு தந்திருக்கிறார். நாம் அவ்வாறுதான் இருக்க வேண்டும்.
தேவன் ஒருவரை ஊழியம் செய்ய அழைக்கும்போது அவர் **"புதிய உடன்படிக்கையின் ஊழியக்காரராயிருக்கும்படியே"** அழைக்கப்படுகிறார்; பழைய உடன்படிக்கையின் ஊழியக்காரராயிருக்கும்படி இப்போது தேவன் யாரையும் அழைப்பதில்லை. எத்தனையோ பேர் நோய்களோடு, வேதனைகளோடு, துன்பங்களோடு, துயரங்களோடு, கண்ணீரோடு, வறுமையோடு, விடுதலைக்காக, சமாதானத்துக்காக, இரட்சிப்புக்காக இயேசுவை தேடி ஓடி வருகிறார்கள். வலது கைக்கும் இடது கைக்கும் வித்தியாசம் தெரியாத இந்த அருமையான மக்கள் ஒவ்வொருவருக்காகவும் இயேசு இரத்தம் சிந்தி மரித்தார். **அவர்களுக்கு தேவன் எதையாவது செய்ய, கொடுக்க வேண்டுமானால் அது அனைத்தும் புது உடன்படிக்கையின் அடிப்படையிலேயே இருக்கும்.** அப்படியிருக்குக்கும்போது, போதிக்கிற உபதேசிக்கிற நாம் அறியாமையினால், பழைய உடன்படிக்கையில் இருந்து எதையாவது சொல்லி அவர்களை தவறான பாதையில் நடத்தி விடாதபடி மிகவும் கவனமாக இருக்க வேண்டும். எதற்கு பழைய உடன்படிக்கையின் வார்த்தைகள் உபயோகப்படுத்தப்பட வேண்டுமோ அதற்கு மாத்திரமே உபயோகப்படுத்தப்பட வேண்டும். நாம் புதிய உடன்படிக்கையின் ஊழியக்காரர்கள் ". போதிக்கிறவர்களும், மேய்ப்பர்களும், உபதேசிப்பவர்களும் புதிய உடன்படிக்கையை பற்றி நன்கு அறிந்திருக்க வேண்டும். விசுவாசிகளும், ஒருவருடைய போதனையை உபதேசத்தை கேட்டு ஏற்றுக்கொள்வதற்கு முன்பு, அவருக்கு புது உடன்படிக்கையை பற்றி நன்கு அறிவு இருக்கிறதா, புது உடன்படிக்கையின் கீழ் அவர் இருக்கிறாரா என்று அறிந்து கொண்டு அதன்பிறகு அவரது போதனையை உபதேசத்தை ஏற்றுக்கொள்வதே தேவனுடைய சித்தம்.

உதாரணத்துக்கு சில பழைய உடன்படிக்கை போதனைகளையும், புதிய உடன்படிக்கையின் போதனைகளையும் பார்ப்போம்.

| பழைய உடன்படிக்கை போதனை. | புதிய உடன்படிக்கை போதனை |
|---|---|
| 1. ஒரு குழந்தைக்காக ஜெபிக்கும் விசுவாசியிடம் - " நீ *1 சாமுவேல் 1* ம் அதிகாரத்தில் குறிப்பிட்டிருக்கிற படி அழுது ஜெபிக்க வேண்டும்". | கேளுங்கள் கொடுக்கப்படும் *( மத் 7:7, 8 ).* நீங்கள் கணவனும் மனைவியுமாக ஒரு மனப்பட்டு கேளுங்கள் *( மத் 18:19, 1 பேதுரு 3:7 ).* இது உங்கள் உரிமை. தேவனுடைய சித்தம் *( 3 யோவான் 1:2 ).* |
| 2. நீங்கள் தசம பாகம் கொடுக்க வேண்டும். இல்லை என்றால் தேவன் உங்களை, உங்கள் வருமானத்தை சபிப்பார் *( மலா 3:8-11 )* | கொடுங்கள் அப்போது உங்களுக்கு கொடுக்கப்படும் *( லூக்கா 6:38 ).* தசம பாகம் என்று ஒரு சிறிய பாகத்தை தண்டனைக்கு பயந்து கொடுப்பது தேவனுக்கு உகந்தது அல்ல. *( கலா 3:13 )* உங்கள் திராணிக்கேற்ற படி கொடுங்கள். 20 சதவீதம் 30 சதவீதம் 50 சதவீதம் என்று உதாரத்துவமாக கொடுங்கள் *( 2 கொரி 9:7,8 ).* நூறு மடங்காக தேவன் திருப்பி தருவார் *( மாற்கு 10:30, லூக்கா 6:38 ).* நீங்கள் ஐசுவரியவான்களாக வாழலாம் *( 2 கொரி 8:9 ).* |
| 3. யாக்கோபை போல போராடி ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்ள வேண்டும் *( ஆதி 32:26 ).* | தேவன் சகல வித ஆவிக்குரிய ஆசீர்வாதங்களாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார் *( எபே 1:3 ).* தன் மகனையே தந்தவர் எப்படி மற்ற காரியங்களை தராமல் இருப்பார் *( ரோமர் 8:32 ).* இயேசுவை நீங்கள் ஏற்றுக்கொண்டவர் என்றால் எல்லா வாக்குத்தத்த ஆசீர்வாதங்களும் உங்களுடையவை *( 2 கொரி 1:20 ).* |
| 4. தானியேலை போல உபவாசித்து காத்திருந்து கேட்டால்தான் தேவன் தருவார். சாத்தான் ஜெபத்தின் பதிலை தடுத்திருப்பான். ***தானியேல் 9, 10 அதிகாரங்கள்.*** | சாத்தானை எதிர்த்து நில்லுங்கள், அப்போது அவன் உங்களை விட்டு ஓடிப்போவான் *( யாக்கோபு 4:7 ).* அவருடைய சித்தப்படி கேட்டால் தேவன் நிச்சயமாக தருகிறார் *( 1 யோவான் :14,15 ).* **உபவாசிப்பது நம்மை மாற்றும், தேவனை மாற்றாது.** தேவன் மாறாதவர். புதிய உடன்படிக்கை விசுவாசிகள் அனைவரும் உபவாசிக்க வேண்டும். அது நமது அவ நம்பிக்கையை போக்கும் *( மத் 17:21 )* |

இதனால், எல்லோரும் சரியான வாக்கியங்களை உபயோகித்து ஜெபித்தால் மாத்திரமே தேவன் பதில் தருவார் என்பது இல்லை. தேவன் இருதயங்களை பார்க்கிறவர். **அவர் தன் கருணையால் விசுவாசத்தோடு ஜெபிக்கப்படும் எந்த ஜெபத்துக்கும் பதிலை கொடுக்கிறவர்.** ஆனால் போதிக்கும்போது, பிரசங்கிக்கும்போது தவறான போதனைகளை கொடுத்தால் அதை கேட்பவர்கள் தவறான விசுவாசம் உடையவர்களாக ஆகிவிடுவார்கள் *( ரோமர் 10:17 ).* தவறான விசுவாசம் தவறான முடிவுகளை கொடுக்கும். சுகவீனமாக இருக்கும் ஒருவரிடம், தேவனுடைய சித்தம் இருந்தால் நீ சுகமாவாய் என்று சொல்லும்போது, அவர் நான் சுகமடைவது தேவனுடைய சித்தம் அல்ல என்று தவறாக விசுவாசித்து மரிக்கக்கூடும். ஆனால் அதே சமயம் எல்லோரும் சுகமாய் இருப்பதே தேவனுடைய சித்தம் *( 3 யோவான் 2 )* என்று சொல்லும்போது அதைக்கேட்டு சரியாக விசுவாசித்து அவர் தன் சுகத்தை பெற்றுக்கொள்ளக்கூடும். **ஆகவே நாம் உடன்படிக்கை, வேதாகம யுகங்கள் இவற்றை பற்றி நன்கு அறிந்து கொண்டு புதிய உடன்படிக்கையின் ஆசீர்வாதங்களை மக்களுக்கு பகிர்ந்து கொடுக்கிறவர்களாக இருக்க வேண்டும்.**

# புதிய உடன்படிக்கையில் இருக்கிற காரியங்கள்

*எபி 8:10 அந்த நாட்களுக்குப்பின் நான் இஸ்ரவேல் குடும்பத்தாரோடே பண்ணும் உடன்படிக்கையாவது: என்னுடைய பிரமாணங்களை அவர்களுடைய மனதிலே வைத்து, அவர்களுடைய இருதயங்களில் அவைகளை எழுதுவேன்; நான் அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள்.*
*11 அப்பொழுது சிறியவன் முதற்கொண்டு பெரியவன்வரைக்கும் எல்லாரும் என்னை அறிவார்கள்; ஆகையால், கர்த்தரை அறிந்துகொள் என்று ஒருவன் தன் அயலானுக்கும், ஒருவன் தன் சகோதரனுக்கும் போதிக்கவேண்டுவதில்லை.*
*12 ஏனெனில் நான் அவர்கள் அநியாயங்களைக் கிருபையாய் மன்னித்து, அவர்கள் பாவங்களையும் அக்கிரமங்களையும் இனி நினையாமலிருப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.*

**1. தேவனும் அவரது பிரமாணங்களும் நமக்குள்:** "*என்னுடைய பிரமாணங்களை அவர்களுடைய மனதிலே வைத்து, அவர்களுடைய இருதயங்களில் அவைகளை எழுதுவேன்; நான் அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள்."*
***2. தேவனை அறியும் அறிவு.*** "*சிறியவன் முதற்கொண்டு பெரியவன்வரைக்கும் எல்லாரும் என்னை அறிவார்கள்; ஆகையால், கர்த்தரை அறிந்துகொள் என்று ஒருவன் தன் அயலானுக்கும், ஒருவன் தன் சகோதரனுக்கும் போதிக்கவேண்டுவதில்லை."*
**3. பரிசுத்தம்.** "*நான் அவர்கள் அநியாயங்களைக் கிருபையாய் மன்னித்து, அவர்கள் பாவங்களையும் அக்கிரமங்களையும் இனி நினையாமலிருப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்."*

புதிய உடன்படிக்கையில் மேற்குறிப்பிட்ட மூன்று முக்கிய காரியங்கள் அடங்கியிருக்கின்றன. தேவனுடைய நித்திய நோக்கத்தை வைத்து பார்க்கும்போது, அவர் நமது தேவனாக இருக்கவும் நாம் அவரது ஜனங்களாக இருக்கவும் முதலில் தேவன் தன் ஜீவனையும் வல்லமையையும் தருகிறார். இதன் மூலமாக நாம் அவரை ஆழமாக அறிந்து கொண்டு அவரோடு நம் அன்றாட வாழ்க்கையை வாழ முடியும். இந்த நிலைமைக்கு நாம் செல்லுவதற்கான காரணமாக இருக்கும் செயல் **'பாவ மன்னிப்பு'.** ஆகவேதான் இது இவ்வசனங்களில் கடைசியாக குறிப்பிடப்பட்டிருக்கின்றது. ஆனால் நமது ஆவிக்குரிய அனுபவத்தை வைத்து பார்க்கும்போது, முதலாவது நாம் பாவ மன்னிப்பால் கிடைக்கும் பரிசுத்தத்தை பெற்று, அதன் பின் தேவனுடைய மக்கள் ஆகிறோம், அதன் பின் தேவனை ஆழமாக அறிந்து கொள்கிறோம்.

*12 ஏனெனில் நான் அவர்கள் அநியாயங்களைக் கிருபையாய் மன்னித்து,"* இங்கே **'ஏனெனில்'** என்ற வார்த்தை, தேவன் நமக்கு அவரது ஜீவனை தருவதற்கு முன்பாக நம் பாவங்களை மன்னித்து மறக்கிறார் என்பதையே குறிப்பிடுகிறது. ஆகவே புதிய உடன்படிக்கையில், நாம் முதலில் 'பரிசுத்தம்' அதன் பின் ' தேவனும் அவரது சட்டமும் நமக்குள்' அதன் பின் 'தேவனை அறியும் அறிவு' என்ற வரிசையில் படிப்போம்.

## 1. பரிசுத்தம்.

*எபி 8:12 ஏனெனில் நான் அவர்கள் அநியாயங்களைக் கிருபையாய் மன்னித்து, அவர்கள் பாவங்களையும் அக்கிரமங்களையும் இனி நினையாமலிருப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.*
வேத வசனங்களின்படி பார்க்கும்போது பாவம் என்பது 1. பாவ சுபாவம் 2. பாவச்செயல். பாவ சுபாவம் என்பது மறுபடியும் பிறக்காக மனிதருக்குள் இருப்பது, அவர்களை ஆளுகை செய்வது, அவர்களை ஏவி அவர்களை பாவம் செய்ய தூண்டுவது - **பாவம்** ( ***ரோமர் 6:17, 7:20,21*** ). பாவச்செயல் என்பது இந்த பாவசுபாவத்தின் தூண்டுதலினால் மனிதர் செய்கிற செயல்கள் - **பாவங்கள்.** பாவச்செயல்கள் மன்னிக்கப்பட வேண்டும், சுத்திகரிக்கப்பட வெண்டும். இதை இயேசுவின் இரத்தம் செய்கிறது **(** ***மத் 26:28, வெளி 1:6; எபி 9:14*** **).** இயேசுவின் சிலுவை பாவ சுபாவம் உள்ள பழைய மனிதனை இயேசுவோடு கூட மரிக்க செய்து, மறுபடியும் பிறந்த மனிதனை பாவசுபாவம் இல்லாதவனாக ஆக்குகிறது. **(** ***ரோமர் 6: 6,18*** **).**

இயேசு நமக்காக இரத்தம் சிந்தியதால், தேவன் நம் அநியாயங்களை கிருபையாய் மன்னிக்க முடியும். அவர் நமது பாவங்களையும் அக்கிரமங்களையும் மன்னிப்பது மாத்திரமல்ல அவற்றை **இனி நினைக்கவும் மாட்டார். தேவன் நம்முடைய பாவங்களை மறக்க முடியும் என்பது அவர் நம்முடைய பாவங்களை கவனிக்காமல் இருக்கிறார் அல்லது நினைக்காமல் இருக்கிறார் என்பதால் அல்ல; இயேசு கிறிஸ்துவின் இரத்தம் நமது பாவங்களை மூடி மறைத்து அவற்றை கழுவி விட்டதனால் (** ***ஏசா 44:22; எபி 1:3; வெளி 1:6*****).** தேவன் தன்னைத்தானே ஒரு உடன்படிக்கைக்குட்படுத்தியிருக்கிறார். அவர் நம் அநியாயங்களை கிருபையாய் மன்னித்து, பாவங்களையும் அக்கிரமங்களையும் இனி நினையாமல் இருப்பேன் என்று சொன்னால் " அவர் சொன்னபடியே செய்வார் ". அதில் நாம் எந்தவிதமான சந்தேகமும் கொள்ள தேவையில்லை. இதுதான் புது உடன்படிக்கையின் மகத்துவம். இதுதான் சுவிசேஷம் - நற்செய்தி. *"பலவேளைகளிலும் தேவன் மறந்ததை நாம் நினைவில் வைக்கிறோம், தேவன் நினைவில் வைத்திருப்பதை நாம் மறந்து போகிறோம்." (வாட்ச் மேன் நீ).*

**"உங்கள் அநியாயங்களை கிருபையாய் மன்னித்து, உங்கள் பாவங்களையும் அக்கிரமங்களையும் இனி நினையாமலிருப்பேன்"** என்று கர்த்தர் சொல்லுகிறார். இதை கர்த்தர் சொல்லியிருந்தாலும், நியாயப்பிரமாண

மனோபாவத்தில் இருப்பவர்களுக்கும், கிருபையால் நீதிமான்களாக்கப்படுகிறோம் என்பதை புரியாதவர்களுக்கும், மதத்துக்குள் இருக்கும் பலருக்கும் இதை ஜீரணித்துக்கொள்ளவே முடியாது. இவ்வசனம் ஏதோ மொழி பெயர்ப்பு தவறி ஒரு இடத்தில் வந்தது அல்ல..

*எரே 31:34 ...........நான் அவர்கள் அக்கிரமத்தை மன்னித்து, அவர்கள் பாவங்களை இனி நினையாதிருப்பேன்.*

*எபி 10:17 ........அவர்களுடைய பாவங்களையும் அவர்களுடைய அக்கிரமங்களையும் நான் இனி நினைப்பதில்லை என்பதைச் சொல்லுகிறார்.*

*2 கொரி 5:19 ............தேவன் உலகத்தாருடைய பாவங்களை எண்ணாமல்,*

*சங் 32:2 எவனுடைய அக்கிரமத்தைக் கர்த்தர் எண்ணாதிருக்கிறாரோ, எவனுடைய ஆவியில் கபடமில்லாதிருக்கிறதோ, அவன் பாக்கியவான்.*

*ரோம 4:8 எவனுடைய பாவத்தைக் கர்த்தர் எண்ணாதிருக்கிறாரோ, அவன் பாக்கியவான் என்று தாவீது சொல்லியிருக்கிறான். ( ஏசாயா 43:25 )*

**இதனால் நாம் என்ன பாவம் செய்தாலும் பரவாயில்லை என்று எடுக்கவேக்கூடாது.** பாவத்தின் சம்பளம் என்றுமே மரணம் ( *ரோமர் 6:23*), சாத்தானுக்கு அடிமைத்தனம் ( *ரோமர் 6:16* ), அழிவு, இல்லாய்மை (*யோவான் 10:10* ). **ஆகவே ஒரு விசுவாசி ஒருபோதும் ஒரு பாவமும் செய்யக்கூடாது**. ஆனாலும் தேவன் நம்முடைய அக்கிரமங்களையும் பாவங்களையும் நினையாமலிருப்பது அவரது உடன்படிக்கையில் அவர் எழுதியிருப்பது. **புதிய உடன்படிக்கை நமது நீதிச்செயல்களின் அடிப்படையில் உருவாக்கப்பட்டது அல்ல; இயேசுவின் நீதிச்செயல்களால் உருவாக்கப்பட்டது ( *கலா 3:29* ).** இயேசுவின் இரத்தத்தினால், தேவன் நம் பாவங்களை இனி நினையாமலிருக்க முடியும். இயேசுவின் இரத்தம் நம்மை நீதிமான்களாக, புதிய உடன்படிக்கைக்கு தகுதியுள்ளவர்களாக ஆக்குகிறது; நமது செயல்கள் அல்ல. இது வேறு எந்த மதத்திலும் இல்லாத மகத்துவம். இயேசுவின் இரத்தத்தால் மாத்திரம் கிடைக்கும் தனிச்சிறப்பு வாய்ந்த மகத்துவம். புது உடன்படிக்கையின் ஒரு மகாப்பெரிய ஆசீர்வாதம். தேவன் நம்மை பரிசுத்தப்படுத்துவதால் நாம் பரிசுத்தவான்கள். அதனால் தேவனுடைய மற்ற எல்லா ஆசீர்வாதங்களுக்கும் நாம் தகுதியுள்ளவர்களாகிறோம். புதிய உடன்படிக்கைக்குள் இருக்கும் எந்த ஒரு விசுவாசியும் தான் ஒரு "பாவி" என்று ஒரு போதும் சொல்ல வேண்டியதில்லை. நீதிமான் என்று தலைநிமிர்ந்து நின்று நீதிக்கிரியைகளை உற்சாகமாக தைரியமாக செய்யலாம்.

## 2. தேவனும் அவரது பிரமாணங்களும் நமக்குள்

*எபி 8:10 ...........என்னுடைய பிரமாணங்களை அவர்களுடைய மனதிலே வைத்து, அவர்களுடைய இருதயங்களில் அவைகளை எழுதுவேன்; நான் அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள். ( 2 கொரி 6:18; எபி 1:5; எசே 36:25-28 ).*

### தேவனுடைய பிரமாணம்

*எபி 8:10 என்னுடைய பிரமாணங்களை அவர்களுடைய மனதிலே வைத்து, அவர்களுடைய இருதயங்களில் அவைகளை எழுதுவேன்;*

பழைய உடன்படிக்கையில், தேவனுடைய நியாயப்பிரமாணம் மனிதருக்கு வெளியில் கற்பலகையில் எழுதி வைக்கப்பட்டிருந்தது. புதிய உடன்படிக்கையில் தேவனுடைய நியாயப்பிரமாணம் மனிதரின் மனதுக்குள் வைக்கப்பட்டு இருதயங்களில் எழுதப்பட்டிருக்கிறது.

கற்பலகைகளில் எழுதப்பட்டு வெளியே இருப்பது **"எழுத்திற்குரியது"**.

மனதுக்குள் வைக்கப்பட்டு இருதயங்களில் எழுதப்பட்டிருப்பது **"ஆவிக்குரியது"**.

*2கொரி 3:6 புது உடன்படிக்கையின் ஊழியக்காரராயிருக்கும்படி, அவரே எங்களைத் தகுதியுள்ளவர்களாக்கினார். அந்த உடன்படிக்கை எழுத்திற்குரியதாயிராமல், ஆவிக்குரியதாயிருக்கிறது; எழுத்து கொல்லுகிறது, ஆவியோ உயிர்ப்பிக்கிறது.*

**பழைய உடன்படிக்கை - நியாயப்பிரமாணம் - எழுத்து - கொல்லுகிறது ;**

**புதிய உடன்படிக்கை - தேவனுடைய பிரமாணம் - ஆவி உயிர்ப்பிக்கிறது.**

ஆகவே நம் மனதில் வைக்கப்படு இருதயங்களில் எழுதப்படும் பிரமாணங்கள் என்றால் - பிரமாணங்கள் - **புதிய உடன்படிக்கை** - ஆவி.

*யோவா 6:63 ஆவியே உயிர்ப்பிக்கிறது, மாம்சமானது ஒன்றுக்கும் உதவாது; நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது.*

**நம் மனதில் வைக்கப்பட்டு இருதயங்களில் எழுதப்படும் தேவனுடைய பிரமாணங்கள் என்பது " ஆவி - சுவிசேஷம் - புதிய ஏற்பாடு - பரிசுத்த ஆவியானவர் நம்மில் பேசுவது - புதிய ஏற்பாட்டு வசனங்கள் "**

### இவை ஏன் "பிரமாணங்கள்" என்று பன்மையில் அழைக்கப்படுகின்றன ?

பிரமாணம் என்பது ஒன்றுதான். ஆனால் இந்த பிரமாணத்தின் செயல் முறைகள் நமக்குள் ஒன்றுக்கும் மேற்பட்டதாக இருக்கின்றன. பிரமாணம் நம் ஆவியில், மனதில், சித்தத்தில், உணர்ச்சிகளில்... நம் உள்ளில் எல்லாம் கிரியை செய்கிறது. ஆகவேதான் *எரே 31:33 என் நியாயப்பிரமாணத்தை அவர்கள் உள்ளத்திலே வைத்து,* (***Eng. Bible; i will put my law in their inward parts*** ) என்று குறிப்பிடுகிறது. ஆகவே பிரமாணத்தை பொறுத்த வரை அது ஒன்றுதான். ஆனால் அதன் செயல்முறைகளை பார்க்கும்போது அது

ஒன்றுக்கும் மேற்பட்ட பன்மையில் இருக்கிறது. தண்ணீர் ஒன்றுதான் ஆனாலும் அது பல குழாய்களில் வருவது போல. நமக்குள் இருக்கும் ஜீவன் ஒன்றுதான், ஆனால் அதன் செயல்கள் பல. புதிய உடன்படிக்கை விசுவாசிகளுக்கான பிரமாணங்கள் அனைத்தும் அவரது இருதயத்திலேயே தேவனால் எழுதப்படிருக்கி றது. எப்போது எதை செய்ய வேண்டும் அல்லது செய்யக்கூடாது என்பது அவருக்கே தெரியும்.

*நான் அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள்.*

தேவனுடைய நித்திய விருப்பம்: **தேவன் தேவனாயிருக்கிறார், அவர் தன் மனிதர் மத்தியில் ஜீவித்து அவர்கள் தேவனாயிருக்க வேண்டும்** என்பதே அவருடைய நித்திய விருப்பம்.
அகிலத்தையும் படைத்த தேவன் மனிதனை தன் சாயலாக படைத்தார் ( *ஆதி 1:27* ). மனிதன் தன்னைப்போல இருக்க வேண்டும் என்றே தேவன் விரும்பினார் ( *எபே 1:4,5; ரோமர் 8:29,30* ). ஏதேனில் மனிதனோடு நடப்பது தேவனுக்கு வழக்கமாக இருந்தது ( *ஆதி 3:8* ). ஜீவ விருட்சம் என்பது தேவனிடம் இருந்து வரும் ஜீவனை குறிப்பிடுகிறது ( *சங் 36:9; யோவான் 1:4; 11:25; 14:6; 1 யோவான் 5:12*). மனிதன் ஜீவ விருட்சத்தின் கனியை புசித்து தேவனுடைய ஜீவனை உடையவனாக இருக்கவே தேவன் விரும்பினார். ஆனால் மனிதன் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியை புசித்து தேவனிடம் இருந்து பிரிந்து போனவன் ஆனான். ஆனாலும் தேவன் மனிதனோடு நடந்தார் ( *ஆதி 5:22* ).
தேவனுடைய கட்டளைகளில் தேவனுடைய விருப்பம் தெளிவாக சொல்லப்பட்டிருக்கிறது ( *யாத் 20:2-8* ). இஸ்ரவேல் ஜனங்களோடு பல முறை தான் அவர்கள் தேவனாக அவர்கள் நடுவில் இருக்கிற தன் விருப்பத்தை தேவன் சொல்லியிருக்கிறார் ( *யாத் 25:8; 29:45-46; லேவி 25:38; 26:12* ).
சாத்தான் இயேசுவை சோதித்தபோது, தான் மனிதனுடைய தெய்வமாக வேண்டும் என்பதே அவனது விருப்பம். மனிதன் அவனை தெய்யமாக ஆராதிக்க வேண்டும் என்று அவன் விரும்பினான். ( *மத் 4:9-10* ).
இயேசு கற்பித்த ஜெபத்திலும் தேவனுடைய விருப்பம் தெளிவாக இருக்கிறது. ( *மத் 6:9-10* ).

பின், சரியான சமயத்தில் தேவன் இயேசு கிறிஸ்துவாக வந்து தன் மனிதர் நடுவில் வாசம் செய்தார்.
*யோவா 1:14 அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணினார்;........ ( யோவான் 14:23 ).*
தேவனுடைய திருச்சபை ஸ்தாபிக்கப்பட்டபோது அது ஆவிக்கேற்ற மாளிகையாய் இருக்கிறது. *1பேது 2:5 ஜீவனுள்ள கற்களைப்போல ஆவிக்கேற்ற மாளிகையாகவும், இயேசுகிறிஸ்து மூலமாய்த் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும்படிக்குப் பரிசுத்தஆசாரியக்கூட்டமாகவும் கட்டப்பட்டுவருகிறீர்கள்.*
தேவனுடைய திருச்சபை இப்போது தேவனுடைய வாசஸ்தலம் "*எபே 2:22 அவர்மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக்கட்டப்பட்டுவருகிறீர்கள்.*"
தேவனுடைய வாசஸ்தலம் மீண்டும் பூமியில் நிறுவப்படும்போது, தேவன் தன் மக்கள் மத்தியில் நித்தியமாக வாசமாயிருப்பார்.
*வெளி 21:3 மேலும், பரலோகத்திலிருந்து உண்டான ஒரு பெருஞ்சத்தத்தைக் கேட்டேன்; அது: இதோ, மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலமிருக்கிறது, அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார்; அவர்களும் அவருடைய ஜனங்களாயிருப்பார்கள், தேவன்தாமே அவர்களோடேகூட இருந்து அவர்களுடைய தேவனாயிருப்பார்.*

### தேவன் "தேவனாக" தேவன் "பிதா" வாக( தகப்பனாக ) (Eng.father).

*யோவா 20:17 இயேசு அவளை நோக்கி: என்னைத் தொடாதே, நான் இன்னும் என் பிதாவினிடத்திற்கு ஏறிப்போகவில்லை; நீ என் சகோதரரிடத்திற்குப் போய், நான் என் பிதாவினிடத்திற்கும் உங்கள் பிதாவினிடத்திற்கும், என் தேவனிடத்திற்கும் உங்கள் தேவனிடத்திற்கும் ஏறிப்போகிறேன் என்று அவர்களுக்குச் சொல்லு என்றார்.*
தேவனை நாம் தேவன் என்று அழைப்பது இந்த அகிலத்துடன் அவருக்குள்ள உறவை குறிக்கிறது. தேவனை நாம் 'அப்பா' என்று அழைப்பது நமக்குடனான அவரது தனிப்பட்ட உறவை குறிக்கிறது. நம் தேவன் நம் அன்பான தகப்பன். அதேவேளை அவர் ராஜாதி ராஜா, கர்த்தாதிகர்த்தர், மகத்துவமும் வல்லமையும் உள்ளவர்.

தேவனுடைய நித்திய விருப்பம், **" அவர் தேவன், அவர் தன் மக்களுடைய தேவனாக அவர்கள் நடுவில் வாசம் செய்ய வேண்டும் ".** இது புது உடன்படிக்கையின் ஒரு முக்கியமான காரியம். ஆசீர்வாதம். புதிய உடன்படிக்கைக்குட்பட்ட ஒவ்வொருவரோடும், அவர் உள்ளில் தேவன் வாசம் செய்கிறார். தேவன் ஒரு விசுவாசியோடு வாசம் செய்வது புது உடன்படிக்கையின் சட்டப்படியான உரிமை. என்ன ஒரு மகாப்பெரிய ஆசீர்வாதம் !

## 3. தேவனை அறியும் அறிவு

*எபி 8:11 அப்பொழுது சிறியவன் முதற்கொண்டு பெரியவன்வரைக்கும் எல்லாரும் என்னை அறிவார்கள்; ஆகையால், கர்த்தரை அறிந்துகொள் என்று ஒருவன் தன் அயலானுக்கும், ஒருவன் தன் சகோதரனுக்கும் போதிக்கவேண்டுவதில்லை.*

இது ஒவ்வொருவரும் தனிப்பட்ட முறையில் தேவனை அறிந்திருக்கிற ஆழ்ந்த அறிவு உள்ளவர்களாக இருப்பதை குறிப்பிடுகிறது. தேவனுடைய ஜனங்கள், இந்த அறிவு இல்லாமல் சிறைப்பட்டு போகிறார்கள் என்று வேதாகமம் சொல்லுகிறது *( ஓசியா 4:6; ஏசா 5:13 )*. நித்திய ஜீவன் என்பது தேவனை அறிவதே *( யோவான் 17:3 )*.
*கர்த்தரை அறிந்துகொள் என்று ஒருவன் தன் அயலானுக்கும், ஒருவன் தன் சகோதரனுக்கும் போதிக்கவேண்டுவதில்லை.*

## அப்படியானால் யார் போதிப்பார்கள் ?

*1யோவா 2:27 நீங்கள் அவராலே பெற்ற அபிஷேகம் உங்களில் நிலைத்திருக்கிறது, ஒருவரும் உங்களுக்குப் போதிக்கவேண்டுவதில்லை; அந்த அபிஷேகம் சகலத்தையுங்குறித்து உங்களுக்குப் போதிக்கிறது; அது சத்தியமாயிருக்கிறது, பொய்யல்ல, அது உங்களுக்குப் போதித்தபடியே அவரில் நிலைத்திருப்பீர்களாக.*
**"அவராலே பெற்ற அபிஷேகம் போதிக்கும்".** சிலவேளைகளில் நாம் இதை நம்ப தயங்குவோம். அதனால் வசனம் சொல்லுகிறது " அது சத்தியமாயிருக்கிறது, பொய்யல்ல ". புதிய உடன்படிக்கையின் ஒரு மகா பெரிய ஆசீர்வாதம் 'அபிஷேகம் சகலத்தையும் குறித்து நமக்கு போதிப்பது ". வாழ்க்கையின் எந்த சூழ்நிலையிலும் "என்ன செய்வது என்று தெரியவில்லையே" என்று ஒரு விசுவாசியும் தவித்துப்போய் நிற்கத்தேவையில்லை. சரியான சமயங்களில், சரியான விதத்தில், சரியான முடிவுகளை எடுக்கலாம். வாழ்க்கையின் எல்லா சூழ்நிலைகளிலும் வெற்றியை காணலாம்.

## அபிஷேகத்தின் போதனை

**மனிதனுடைய ஆவியின் மூன்று உபயோகங்கள்.**

1. **ஆராதனை.** *நம் ஆவி தேவனோடு தொடர்பு கொள்ளுதல். யோவான் 4:24 )*
2. **மனசாட்சி.** பரிசுத்த ஆவியானவர் நம் ஆவியில் நம்முடைய நடத்தையை பற்றி கொடுக்கும் சாட்சி. *( ரோமர் 8:16, 9:1, 2 கொரி 1:12 )*
3. **உள்ளுணர்வு:**

மனித சரீரத்துக்கு உணர்வுகள் இருப்பதை போல, மனித ஆவிக்கும் உணர்வுகள் உண்டு. உதாரணம்; உற்சாகம் *(மத் 26:41),* அறிவது *(மாற்கு 2:8 ),* பெருமூச்சுவிட்டு *(மாற்கு 8:12),* கலங்கித்துயரமடைதல் *( யோவான் 11:33 ),* வைராக்கியம் *( அப் 17:16 ),* ஆறுதல் *( 1 கொரி 16:18 ),* கட்டுண்டு *( அப் 20:22 ).* ஆவியின் இந்த செயல்களைத்தான் நாம் உள்ளுணர்வு என்று அழைக்கிறோம். இது ஆவியில் இருந்து நேரடியாக வருவது. உதாரணத்துக்கு நாம் ஒரு செயலை செய்ய தீர்மானித்து தொடங்கும்போது, நம்முள்ளில் இருந்து ஏதோ ஒன்று அது வேண்டாம் என்று தடுப்பது போல இருக்கும். இதுவே உள்ளுணர்வு.
**இந்த உள்ளுணர்வில்தான் அபிஷேகம் நமக்கு போதிக்கிறது**. அதாவது பரிசுத்த ஆவி தருகிற அபிஷேகம் நம் ஆவியின் 'உள்ளுணர்வில்' நமக்கு போதிக்கிறது. நமது சரீரத்தில் ஒரு எண்ணெய் தேய்க்கப்படும்போது எப்படி நமக்கு உணர முடிகிறதோ, அது போலவே பரிசுத்த ஆவி கொடுக்கிற அபிஷேகத்தை - ஒரு காரியத்தை பற்றிய பரிசுத்த ஆவியின் வெளிப்பாட்டை - நம் ஆவி உணர்ந்து கொள்ளும். அது நடப்பது நம் உள்ளுணர்வில்.

இங்கே **'அறிவதற்கும்' 'புரிந்து கொள்வதற்கும்'** உள்ள வேறுபாட்டை நாம் மனதிலாக்கிக்கொள்ள வேண்டும். 'அறிவது' நம் ஆவியில் நடக்கிறது. 'புரிந்து கொள்ளுதல்' நம் மனதில் நடக்கிறது. நம்முடைய ஆவியின் உள்ளுணர்வினால் பரிசுத்த ஆவி சொல்லுவதை நாம் அறிந்து கொள்ளுகிறோம், பின் அது நம் மனதுக்கு தெரிவிக்கப்பட்டு மனது அதை புரிந்து கொள்ளுகிறது. நம் ஆவியின் உள்ளுணர்வில், பரிசுத்த ஆவியின் தூண்டுதலை நாம் அறிந்து கொள்கிறோம். நம் ஆத்துமாவின் மனதில் பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலை புரிந்து கொள்கிறோம். அபிஷேகம் இவ்வாறு எல்லா காரியங்களையும் பற்றி நம்மை போதிக்கும்.

## அப்படியானால் வேதாகமம் ஏன் 'போதிக்க வேண்டும்' என்று சொல்லுகிறது ?

*எபே 4:13 அவர், சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும் போதகராகவும் ஏற்படுத்தினார். ( 1 கொரி 4:17; 14:19; கொலோ 1:28; 2:22; 3:16; 1 தீமோ 2:7; 3:2; 4:11,13; 2 தீமோ 2:2,24 ).*
அபிஷேகம் எப்போதும் எல்லா காரியங்களையும் பற்றி நமக்கு போதிக்கிறது. **ஆனால் பிரச்சினை என்னவென்றால் நாம் அதை கேட்பது இல்லை.** இதனால்தான் வேதாகமம் பல இடங்களிலும் 'கேட்பதை' பற்றி குறிப்பிடுகிறது. *( வெளி 2:11; 3:6; மத் 13:13; ஏசா 6:9-10; யோபு 33:14 ).* தன் மக்கள் சரியான முறையில் தேவன் பேசுவதை கேட்காததால், தேவன் தன் கிருபையினால் தன் ஊழியக்காரர்களை மீண்டும் மீண்டும் அனுப்பி, அபிஷேகம் ஏற்கனவே நம்முள்ளில் பேசி இருப்பதை வேத வசனங்கள் மூலமாக மீண்டும் சொல்லிக்கொடுக்கிறார்.

**புதிய உடன்படிக்கை..** என்ன ஒரு ஆசீர்வாதம்! புதிய உடன்படிக்கையை நன்கு அறிந்த ஒவ்வொரு விசுவாசியும் தேவனோடு, அவரது ஜீவனோடு, தேவனால் போதிக்கப்பட்டு, நடத்தப்பட்டு, பரிசுத்தவான்களாக வாழலாம். இது இயேசுவின் இரத்தத்தினால் நமக்கு கிடைக்கும் மாபெரும் ஆசீர்வாதம். இயேசு கிறிஸ்து நாம் ஒரு ஜெயம் உள்ள வாழ்வு வாழ்வதற்கான யாவையும் புதிய உடன்படிக்கை மூலமாக நமக்கு வாங்கிதந்து இருக்கிறார். புதிய உடன்படிக்கை பற்றி நன்கு அறிந்து அந்த ஆசீர்வாதங்களில் வாழ்ந்து மற்றவர்களுக்கும் ஆசீர்வாதமாக இருப்போம்.

**ஆமென்.**

ஆசீர்வதிக்கப்பட்டவர்களாக இருங்கள்.

**Bro D.Vergin kumar.**

If you have any doubts or if you need any clarifications kindly contact me in deeveekumar@yahoo.com Ph; 968 25572195, 99663557. 99638328.

**Resources;** International Standard Bible encyclopedia, The Bible exposition commentary - New Testament, Dakes bible commentary, Andrew Wommack bible commentary, Adam Clarke's Bible Commentary, Barnes' Notes on the New Testament, Vine's expository Dictionary of Old Testament words, Vine's expository Dictionary of New Testament words, Strong's bible concordance, Wuest's bible commentary, Wuest's New Testament word studies, Vincent's Word Studies in the New Testament, The better covenant - by Watchman nee. etc.. All bible quotes are from King James Version and American Standard version.

-------------------------------